நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எண்.1 திருச்சிராப்பள்ளி

முன்னிலை : திருமதி P. சுபாஷினி B.A.,BL.,
நீதித்துறை நடுவர் எண்.1,
திருச்சிராப்பள்ளி.

2022 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14 ஆம் நாள் புதன்கிழமை

**Cr.M.P.No.32536/2022 (in) Trichy CCB Cr. No.12/2020**

P. வேலுசாமி, 54/2022
த/பெ. பழனிசாமி ... மனுதாரர்/ நிகழ்நிலைபுகார்தாரர்

/எதிர்/

காவல் ஆய்வாளர்.
திருச்சி மாநகர குற்றப்பிரிவு,
குற்ற எண். 12/2020. ,.. எதிர்மனுதாரர்/ குற்றமுறையீட்டாளர்

சிவசுப்பிரமணி
த/பெ. மருதப்பிள்ளை ... 1 வது எதிரி

இம்மனு 29.11.2022 அன்று கு.வி.மு.ச. பிரிவு 457 r/w 451 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் திரு. V. சரவணன் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிரி தரப்பில் திரு. S. சுப்புராஜ் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/குற்ற முறையீட்டாளர் தரப்பில் அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை.2 அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டு இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

மனுதாரர்/நிகழ்நிலைபுகார்தாரர் தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு 457 r/w 451 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :**

இம்மனுவின் மனுதாரர் நிகழ்நிலைபுகார்தாரர் ஆவார். இவ்வழக்கின் எதிரிகளான ஜான்கென்னடி மற்றும் நீலமேகம் மற்றும் இதர நபர்கள் மனுதாரருக்கு சொந்தமான கட்டுமான பொருட்களை அவருடைய வீட்டில் இருந்து திருடி சென்றுவிட்டதாகவும், அதை பொறுத்து எதிரிகளுக்கு எதிராக புகார் அளித்து அதன் அடிப்படையில் பிரிவு

WWW.LIVELAW.IN

120(B), 420, 448, 379, 468, 469, 195, 190, 201 இதச பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி குற்ற எண்ணில் எதிர்மனுதாரர் இரண்டு எதிரிகளை கைது செய்து அவர்களிடமிருந்து மனுதாரருக்கு சொந்தமான சொத்துக்களை கைப்பற்றியுள்ளார்கள். மேற்படி சொத்துக்கள் திறந்த வெளியில் வைத்திருக்கும்பட்சத்தில் அவை சேதமடைவதற்கு வாய்ப்பு உள்ளது. எனவே எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய வழக்குச் சொத்துக்களை எதிர்மனுதார்ர் மனுதாரருக்கு வழங்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பிப்பதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபனை மனு :-</u>**

இவ்வழக்கின் வாதி வேலுச்சாமி என்பவர் கொடுத்த புகாரின்பேரில் வழக்கானது பதிவு செய்யப்பட்டு எதிரிகளை கைது செய்தபோது வழக்குச் சொத்தானது கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், மேற்படி வழக்கு சொத்துக்களை வாதி வசம் ஒப்படைக்கும் பட்சத்தில் வழக்கு சொத்துக்களை விற்பனை செய்யவோ, உருமாற்றம் செய்யவோ, அழித்துவிடவோ வாய்ப்புள்ளதாலும், மேலும் நீதிமன்ற விசாரணைக்கு ஆஜர்படுத்தாமலோ இருக்கக்கூடும் என்பதாலும், மேற்படி வழக்குச் சொத்துக்களை வாதி வசம் ஒப்படைக்க கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>3.1ம் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:-</u>**

மனுதாரர் தரப்பில் எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய சொத்துக்கள் மனுதாரருக்கு சொந்தமானது என்றும்,எனவே அவற்றை மீண்டும் மனுதாரரிடம் ஒப்படைக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரிடமிருந்து வழக்கு சொத்துக்களை ஒப்படைப்பதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. 1ம் எதிரி தாக்கல் செய்துள்ள எதிருரையில் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள வழக்குச் சொத்துக்கள் அனைத்தும் 1ம் எதிரி நிறுவனத்திற்காக 2015 ம் ஆண்டு வழங்கப்பட்ட சொத்துக்கள் என்றும், அதற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கு சொத்துக்கள் ஏற்கனவே திண்டுக்கல் மாவட்ட குற்றப்பிரிவு காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக புகாரில் சொல்லப்பட்டுள்ள நிலையில், திண்டுக்கல் மாவட்ட குற்றப்பிரிவு காவல்துறையினரால்

வழக்கு சொத்துக்களை கைப்பற்றவில்லை என்பதால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், திண்டுக்கல் மாவட்ட குற்றப்பிரிவு போலிசார் வேலுசாமியிடமிருந்து கைப்பற்றப்படாத ஒரு வழக்கு சொத்தை கைப்பற்றியதாக பொய்யாக புகார் கொடுத்து, அதன் பேரில் 1ம் எதிரிக்கு சொந்தமான சொத்துக்களை மீண்டும் இம்மனுவின் எதிர்மனுதாரர் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரருக்கும், வழக்குச் சொத்திற்கும் ஏற்கனவே எவ்வித தொடர்பும் இல்லை என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இரு தரப்பும் பரிசீலனை செய்யப்பட்டது.

5. மனு மற்றும் எதிருரை, எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனை மனு ஆகியவற்றை பரிசீலனை செய்யும்போது வழக்கானது தற்போது புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்பது தெரியவருகிறது. வழக்கின் மனுதாரர் வழக்கின் சொத்தானது தனக்கு சொந்தமானது என்பதற்கும் 1ம் எதிரி இவ்வழக்கு சொத்துக்கள் தனக்கு சொந்தமானது என்பதற்கும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளனர். எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கானது புலன் விசாரணை நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டு வழக்கு சொத்துக்களை புகார்தாரரிடம் ஒப்படைக்க ஆட்சேபனையும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர் வழக்கு சொத்தினை தன்னிடம் ஒப்படைக்கக் கோரும் மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**இறுதியாக, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எடுக்கப்பட்டு பின்னர் விரிவாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 14.12.2022 ஆம் தேதியன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd./(P.Subhashini)

நீதித்துறை நடுவர் எண்.1
திருச்சிராப்பள்ளி.

WWW.LIVELAW.IN